ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1834/28 - 2013 ඔක්තෝබර් මස 30 වැනි බදාදා - 2013.10.30

*1834/28 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 30 மற்றும் 7 (1) - (2) ஆம் பிரிவுகளினதும், 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5- 6 ஆம் பிரிவுகளினதும் கீழ் உள்ள விதிகள்*

*1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 30 மற்றும் 7 (1) - (2) ஆம் பிரிவுகளினதும், 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5- 6 ஆம் பிரிவுகளினதும் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தினுள் பிரயாணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் தனியார் வாகனங்கள் தொடர்பாகத் தொகுக்கப்பட்டுள்ள விதிகள் கீழ்வருமாறு என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

எச். எம். உபாலி கொடிகார,
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார
அலுவல்கள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும் கிராம
அபிவிருத்தி அலுவல்களுக்குமான அமைச்சர்.

*2013, ஒற்றோபர் 01.*

இவ்விதிகள் "தனியார் வாகனங்கள் மூலம் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லுதல் தொடர்பான விதிகள்" என அறிமுகப்படுத்தப்படுவதுடன், குறிப்பிட்ட விதிகள் 2013, ஒற்றோபர் 10 ஆந் திகதி முதல் மேல் மாகாணத்தின் உள்ளே அமுல் செய்யப்படுகின்றன.

மேல் மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை முறைப்படுத்தவும் அப்பணியுடன் உடனியங்குகின்ற ஏனைய பணிகளை முறைப்படுத்தும் நோக்கத்தினை நிறைவேற்றும் முகமாகவும், 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாகத்தின் 30 மற்றும் 7 (1)- (2) ஆம் பிரிவுகளினதும் 1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் (திருத்தப்பட்ட) சட்டவாக்கத்தின் 5- 6 ஆம் பிரிவுகளினதும் கீழ் "அதிகாரபூர்வமான வாகனங்கள் என்பது கட்டணமொன்றின் அல்லது இலாபத்தின் கீழ் மாகாணத்தினுள் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு ஆரம்பிக்கும் வாகனங்கள் எனக் கருதப்படும்" என்ற ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேல் மாகாண பாடசாலைச் சேவை வாகனங்களுக்கான கீழ்வரும் நிபந்தனைகள் செயற்படுத்தப்படுகின்றன.

1. (அ) மேல் மாகாணத்தினுள் பாடசாலைச் சிறார்களைப் போக்குவரத்துச் செய்தலில் ஈடுபடுத்தும் பஸ் வண்டி அல்லது வேன் வண்டி உரிமையாளர்கள் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையிலிருந்து வருடத்திற்கு ஒரு முறை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கு பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்படும் முறையான விண்ணப்பப்பத்திரமொன்றை முன்வைத்தல் வேண்டும் ;

(ஆ) பஸ் வண்டி அல்லது வேன் வண்டி உரிமையாளர் அல்லாத ஒருவர் விண்ணப்பித்து இருந்தால் அவ்வாகனம் பாடசாலைப் போக்குவரத்துக்காக சட்டரீதியான அனுமதியை வாகன உரிமையாளரிடமிருந்து பெற்றுள்ளமை குறித்து அதிகார சபை திருப்தியடைதல் வேண்டும். (அனுமதிப்பத்திர கட்டணம் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் செலுத்துதல் வேண்டும்) ;

(இ) அனுமதிப்பத்திரம் உள்ள வாகனமொன்றை வாகன உரிமையாளர் இரண்டாம் தரப்பினருக்கு விற்பனை செய்யும் போது அவ்வனுமதிப்பத்திரத்தை உரிய நபருக்கு மாற்றஞ் செய்வது குறித்து அதிகாரசபை கவனத்திற் கொள்ளலாம். அனுமதிப்பத்திரம் வாகன உரிமையாளருக்கு வழங்கப்படுவதுடன் வாகன உரிமையாளரே இச்சேவையை மேற்கொள்ளாத சந்தர்ப்பத்தில் அச்சேவையை மேற்கொள்ளும் இரண்டாம் தரப்பினருக்கு வாகன உரிமையாளரால் அதிகாரத்தை வழங்க முடிவதுடன், அதன்படி அச்சேவையினை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்ற நபருக்கு அனுமதிப்பத்திரத்தை மாற்றிக் கொடுப்பதற்கு போக்குவரத்து அதிகார சபையினால் முடியும் ;

(ஈ) அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணங்கள் முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ளன ;

(உ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் , புதுப்பித்தல், மாற்றஞ் செய்தல், இரத்துச் செய்தல் தொடர்பான அனைத்து அதிகாரமும் போக்குவரத்து அதிகார சபைக்கு உரியதாகும் ;

(ஊ) அதிகார சபையினால் காலத்திற்குக் காலம் பஸ் வண்டிச் சேவை மற்றும் வேன் வண்டிச் சேவைகளை மேற்கொள்ளும் பஸ் வண்டி உரிமையாளர்களின் பஸ் வண்டிக்கோ அல்லது வேன் வண்டிக்கு தகுதிகளை நியமிக்கலாம் ;

2. பாடசாலைச் சேவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒரு வருடத்திற்கு எவ்வளவு என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு உரியது. காலத்திற்குக் காலம் கட்டணங்களைத் திருத்தியமைக்கும் போது பாடசாலை வேன் வண்டிகள் அமைப்புடன் கலந்துரையாடி அவர்களது இணக்கத்தைப் பெறுவது பொருத்தமாகும்.

3. இவ்விதிகளின் கீழ் வழங்கப்படும் பாடசாலைச் சிறார்கள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தை அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் போக்குவரத்து மேற்கொள்ளும் பாடசாலை பஸ் வண்டியிலோ அல்லது வேன் வண்டியிலோ வைத்துக்கொள்ள வேண்டியுள்ளதுடன், போக்குவரத்து அதிகார சபையினால் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படவேண்டிய தகவல்கள் எவையென விதிக்கப்படல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தை அதிகார சபையோ அல்லது எவரேனும் அதிகாரம்பெற்ற அதிகாரியோ கேட்கும் போது முன்வைத்தல் வேண்டும்.

4. மேல் மாகாணத்தினுள் பாடசாலைச் சேவை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரமின்றி அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் சம்பந்தமாக பாடசாலை பஸ் வண்டி அல்லது வேன் வண்டி தொடர்பாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் போது போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருக்கு குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கான 1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் சட்டவாக்கத்தின் 32 ஆம் மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் செயற்படுத்துவதற்கு அதிகாரம் உண்டு.

5. பண ரீதியாகவோ அல்லது பொருள் ரீதியாகவோ அதிகார சபைக்கு கிடைக்கும் ஏதேனும் மானியங்களை மேல் மாகாணத்தினுள் பாடசாலைச் சேவையை மேற்கொள்ளும் மற்றும் முறைப்படுத்தல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்துவதற்கு போக்குவரத்து அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு.

6. இச்சேவை பொதுமக்கள் சேவை என்பதால் வேன் வண்டியில் ஆசன வசதிகளுடன் போக்குவரத்து செய்ய இயலுமான பிள்ளைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை 10 ஆக இருப்பதுடன், ஆசன வசதிகளுடன் போக்குவரத்து செய்ய இயலுமான பிள்ளைகளின் அதிகபட்ச எண்ணிக்கையை 30 இற்கு மட்டுப்படுத்துதல் வேண்டும். விதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையைவிடக் கூடிய எண்ணிக்கையினரைக் கோண்டு செல்லும் பாடசாலை பஸ் வண்டி அல்லது வேன் வண்டி தொடர்பாக முறைப்பாடு கிடைக்குமிடத்து அதிகார சபையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் பரிசீலனை செய்து அவ்விடயங்கள் உறுதியாகும் பட்சத்தில் பாடசாலை பஸ் வண்டி அல்லது வேன் வண்டியின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் அதிகார சபைக்கு உண்டு.

7. அனுமதிப்பத்திர உரிமையாளர் தொடர்ந்தும் பாடசாலை போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுதல் வேண்டும். இச்சேவை அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் தினத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு வருட காலமாக இருத்தல் வேண்டும்.

*8.* உரிய பாடசாலை போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளும் வண்டிக்கும் பிள்ளைகளுக்கும் முழுக் காப்புறுதி முறையொன்றை அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினூடாக செயற்படுத்துவதற்கு அதிகார சபை தலையிடுதல் வேண்டும்.

*9.* சிறுவர் துஷ்பிரயோகம், போதைவஸ்துக்கள் பாவனை அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பாடசாலை சேவை வண்டி ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு போக்குவரத்து அதிகார சபைக்கு அதிகாரம் இருப்பதுடன், அவ்வாறான வண்டியின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும் அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு.

*10.* மேல் மகாணத்தினுள்ளே பிரவேசிக்கும் மாகாணங்களுக்கு இடையிலான பாடசாலைச் சேவை பஸ் வண்டி ஒவ்வொன்றுக்கும் அல்லது வேன் வண்டி ஒவ்வொன்றுக்கும் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் அவசியமாகும்.

*11.* அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாது பாடசாலைப் போக்குவரத்துச் சேவையை மேற்கொண்டு செல்லும் பஸ் வண்டி அல்லது வேன் வண்டி உரிமையாளருக்கு எதிராக அதிகார சபையால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியும்.

*12.* மேல் மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்கும் தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிச் சேவை மற்றும் பாடசாலைச் சேவைக்கான வண்டிகள் வெவ்வேறாக செயற்படுதல் வேண்டும். நிரந்தர பயணிகள் போக்குவத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்கும் பஸ் வண்டிகள் பாடசாலைப் போக்குவரத்தினை மேற்கொள்ளக்கூடாது.

*13.* அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும் போது அதிகார சபை வாகனத்தின் நிலைமை தொடர்பாக பின்வரும் விடயங்களில் திருப்தியடைதல் வேண்டும் :

(அ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவை என்பதை வேறுபடுத்தி இனங்காணக்கூடியதாக இருத்தல். (பதிவை உறுதி செய்யும் ஸ்டிக்கரை முன் மற்றும் பின் கண்ணாடிகளில் ஒட்டியிருத்தல்) ;

(ஆ) வாகனத்தின் ஓட்ட நிலைமை (பரிசீலனையின் போது தீர்மானித்தல் வேண்டும்) ;

(இ) ஆசனங்களுக்கு இடையிலான இடைவெளி (வசதியாக அமர்ந்து செல்ல இயலுமாதல்) ;

(ஈ) ரயர்களின் நிலைமை (வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கும்போது, புது அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது வாகனங்களை நிறுத்துமிடங்களில் பரிசீலித்தல் வேண்டும் ) ;

(உ) தடுப்புக் கருவித் (brake) தொகுதியின் நிலைமை (வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கும் போது, புது அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது மற்றும் திடீர் பரிசோதனைகளின் போது பரிசீலித்தல் வேண்டும்) ;

(ஊ) பொருத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு துணைக்கருவிகள் (முதலுதவிப் பெட்டி, தீயணைக்கும் கருவிகள் என்பன) ;

(எ) கதவுகளை மூடக்கூடியதாக இருத்தல் (சிறு பிள்ளைகள் மாத்திரம் பயணிப்பதென்றால், சென்றர் லொக் இருத்தல் வேண்டும்) ;

(ஏ) சமிக்ஞை விளக்குத் தொகுதியின் நிலைமை ;

(ஐ) வாகனத்தின் சுத்தம் சிறந்த நிலைமையில் பேணப்படல் ;

(ஒ) பின் ஆசனப்பக்க கண்ணாடியினூடாக காற்றோட்டம் வரக்கூடியதாக இருத்தல் (கட் கிளாஸ்) ;

(ஓ) திடீர் சந்தர்ப்பங்களில் யன்னல்/ கதவுகளை திறப்பதற்கு முடியுமாயிருத்தல் ;

(ஔ) குளிரூட்டி இருப்பின் சாலச் சிறந்தது ;

(க) ஏற்றிச் செல்லும் பிள்ளைகளின் பாடசாலைகளின் பெயர்களைக் காட்சிப்படுத்துதல் ;

(ங) கொண்டு செல்லக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை (அவ்வவ் வாகன தரத்திற்கேற்ற அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையாக மாத்திரம் இருத்தல்) ;

14. வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு நிரந்தர இடமொன்று இல்லாவிடின் அது குறித்து பெற்றோர் பொறுப்பாளர் அல்லது வகுப்பாசிரியரை அறியச் செய்தல் :

(அ) பிள்ளைகளின் வரவு பற்றிய அறிக்கையொன்றை வைத்திருத்தல் ;

(ஆ) ஒரு வாகனத்திலிருந்து இன்னொரு வாகனத்திற்கு பிள்ளைகளை மாற்றி ஏற்றிச் செல்லும் சந்தர்ப்பத்தில் அனைத்து வாகனங்களினதும் சாரதிகளைப் பற்றிய தகவல்களை பெற்றோருக்கும் பாடசாலைக்கும் அறிவித்தல்.

15. வாகனத்தில் இருக்க வேண்டிய சட்டரீதியான ஆவணங்கள் :

(அ) முழு காப்புறுதி செய்திருத்தல் வேண்டும். (பிள்ளைகளுக்கு 8 ஆவது பிரிவின்படி காப்புறுதி அணவலை அதிகார சபை பெற்றுக்கொடுத்தல்) ;

(ஆ) அவ்வருடத்திற்குரிய வருமான வரிப்பத்திரம் இருத்தல் ;

(இ) பதிவுச் சான்றிதழ் ;

[(அ)–(இ): பொறுப்பு பொலிஸ்]

(ஈ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவைக்கு வழிப்பயண அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும் ;

(உ) ஒழுங்குப்படுத்தல் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தகுதிச் சான்றிதழ்.

16. சாரதிகளுக்கான நியமங்கள் :

(அ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் (உரிய வாகன தரத்திற்குரிய) ;

(ஆ) குறைந்த பட்சம் 21 வயதாக இருத்தல் வேண்டும் ;

(இ) குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (புதிதாக ஆரம்பிப்பவர்களுக்கு மாத்திரம் பொருந்தும்) ;

(ஈ) உரிய பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அறிக்கை இருத்தல் (நடத்தை மற்றும் குற்றங்கள் தொடர்பாக) ;

(உ) உடல், மனநிலை ஆரோக்கிய நிலைமையை உறுதி செய்வதற்கு வைத்தியச் சான்றிதழ் இருத்தல்.

17. அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் பொறுப்புகள் :-

(அ) உரிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றில் பதிவு செய்திருத்தல் ;

(ஆ) பாடசாலைப் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ;

(இ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட சாரதி ஒருவரை ஈடுபடுத்துதல் ;

(ஈ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப உரிய வாகனத்தின் நிலைமையை மற்றும் தன்மையைப் பேணுதல் ;

(உ) சிறு பிள்ளைகளைக் (8 வயதிற்கு கீழ்) கொண்டு செல்லும் வாகனங்களுக்கு உதவியாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஊ) வாகன விபத்து நடைபெற்று ஒரு நாளிற்குள் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்திற்கு அறிவித்தல் ;

(எ) பாரிய அல்லது உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடிய விபத்து நடப்பின் மீண்டும் பாடசாலைப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கான தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வரை பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லக்கூடாது ;

(ஏ) பாரிய அல்லது உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடிய விபத்து நடந்த சாரதி நன்கு ஆரோக்கிய நிலையில் உள்ளார் என்பதை ஒழுங்குப்படுத்தல் நிறுவனத்தால் பரிசோதிக்கப்பட்டு பணிபுரிவதற்கு தகுதியுடையவர் என சான்றிதழ் வழங்கும் வரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தாதிருத்தல் ;

(ஐ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் நேரத்திற்குள் சாரதி அல்லது வண்டியின் உதவியாளர் மதுபானம், போதை வஸ்து அல்லது புகைத்தல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு கவனத்திற்கு கொள்ளுதல் வேண்டும் ;

(ஒ) வாகன சாரதி மற்றும் உதவியாளர் ஒழுக்கத்துடனும் கட்டுப்பாடுடனும் நடந்துகொள்ளல் வேண்டும் ;

(ஓ) வாகன சாரதி மற்றும் உதவியாளர் பொருத்தமான ஆடையை உடுத்துதல் வேண்டும் ;

(ஔ) ஏற்றிச் செல்லும் பிள்ளைகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். (பெற்றோர் அல்லது பொறுப்பாளரின் விலாசம், தொலைபேசி இலக்கம், பாடசாலையின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், அதிபரின் தொலைபேசி இலக்கம்) ;

(க) சேவையில் ஈடுபடும் சாரதி இல்லாதவிடத்து தகுதிவாய்ந்த தற்காலிக சாரதியொருவரை ஈடுபடுத்த முடிவதுடன், அவரால் ஏற்படக்கூடிய தவறுக்கு அனுமதிப்பத்திர உரிமையாளர் பொறுப்புக் கூறுதல் வேண்டும் ;

(ங) தொழில்நுட்ப கோளாறு காரணமாக வாகனத்தை ஓட்ட முடியாத சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கு மற்றும் பெற்றோருக்கு அறிவித்து தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளல் ;

(ச) வீட்டிலிருந்து பாடசாலைக்கும், பாடசாலையிலிருந்து வீட்டுக்கும் பயணிக்கும் நேரத்தில் மாத்திரமே பிள்ளைகளை வாகனத்தினுள் வைத்துக்கொள்ள முடிவதுடன் வேறு எந்த நேரத்திலும் பிள்ளைகளை வாகனத்தினுள் வைத்துக் கொள்ளாதிருத்தல் வேண்டும் ;

(ஞ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் கட்டளைகளை சாரதிகள் மீறுவது அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் மீறுவதாகவே கருதப்படும் ;

(ட) அனைத்து பிள்ளைகளும் வானத்தினுள் இடையூறு இன்றியும் கஷ்டமின்றியும் அமர்ந்து கொள்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும் ;

(ண) பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னர் பாடசாலைக்கு பிள்ளைகளை எடுத்துச் செல்லல் ;

(த) வாகனத்தினுள் பிள்ளை நல்ல மனநிலையுடன் பாடசாலை வரை பயணிப்பதற்கும் மீண்டும் வீட்டுக்கு பயணிப்பதற்கும் தேவையான விடயங்களை செய்து கொடுத்தல் அவசியமாகும் ;

(ந) பிள்ளை எச்சந்தர்ப்பத்திலும் வாகனத்தினுள் தனித்து விடப்படாதவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(ப) பிள்ளைக்கு ஏதேனும் துன்புறுத்துகை அல்லது துஷ்பிரயோகம் நடைபெற்றமை அறியக் கிடைத்தால் 1929 ஆம் இலக்க சிறுவர் உதவிச் சேவைக்கு அல்லது அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனே அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ;

(ம) வாகனத்தை நிறுத்தி வைக்கும் இடம் குறித்து பெற்றோருக்கு அல்லது பொறுப்பாளருக்கு அல்லது வகுப்பாசிரியருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ய) பிள்ளைகளின் வருகை பற்றிய முறையான அறிக்கை ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். ஒரு வாகனத்திலிருந்து இன்னொரு வாகனத்திற்கு பிள்ளைகளை மாற்றி ஏற்றிச் செல்லும் சந்தர்ப்பத்தில் அனைத்து வாகனங்களினதும் சாரதிகளைப் பற்றிய தகவல்களை பெற்றோருக்கும் பாடசாலைக்கும் அறிவித்தல் வேண்டும். ;

18. சாரதியின் பொறுப்புக்கள் :

(அ) வாகனத்தில் பயணிக்கும் அனைத்து பிள்ளைகளினதும் பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் ஓட்டுதல் வேண்டும். (அதி வேகமாக ஓட்டுதல் வளைவில் செல்லும் போது அல்லது இன்னொரு வாகனத்தை முற்படுத்திச் செல்லும் போது மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும்) ;

(ஆ) அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பிள்ளைகளைவிடக் கூடுதலாக ஏற்றிச் செல்லக்கூடாது ;

(இ) நன்னடத்தையும், நல்லொழுக்கமும் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) மதுபானம் மற்றும் போதை வஸ்து பாவனையை தவிர்த்தல் வேண்டும் ;

(உ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தில் பதிவு செய்தலும் பயிற்சி பெறலும் ;

(ஊ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுங்கானதும் ஒழுக்கமானதுமான ஆடை அணிந்திருத்தல் வேண்டும் ;

(எ) வாகனத்தினுள் எச்சந்தர்ப்பத்திலும் புகைத்தல் கூடாது ;

(ஏ) ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையை அணிந்திருத்தல் வேண்டும் ;

(ஐ) யாரேனும் ஒரு பிள்ளை தவறு செய்யின் தண்டனை வழங்குவதோ அல்லது கடிந்துரைப்பதோ செய்யக்கூடாததுடன், பெற்றோருக்கோ அல்லது பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கோ அறிவித்தல் வேண்டும் ;

(ஒ) பிள்ளையுடன் பண்பாகக் கதைத்தல் வேண்டும் ;

(ஓ) ஆபாச திரைப்படங்கள், பாடல்கள் அல்லது ஒலித்தொகுப்புக்கள் ஆகியவற்றை கையடக்கத் தொலைபேசி மூலம் பிள்ளைகளுக்கு காட்டுதல், கேட்பதற்கு இடங்கொடுத்தல், பிள்ளைகள் காணும் விதத்தில் வைத்தல் என்பன செய்தல் கூடாது.

19. வாகன உதவியாளரின் பொறுப்புக்கள் :

(அ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள நேரத்திற்குள் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக அவதானமாக செயற்படவேண்டியுள்ளதுடன், அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஆ) போக்குவரத்து மேற்கொள்ளும் நேரத்திற்குள் மதுபானம் மற்றும் போதை வஸ்து பாவனையை தவிர்த்தல் வேண்டும்;

(இ) யாரேனும் ஒரு பிள்ளை தவறு செய்யின் தண்டனை வழங்கக்கூடாததுடன், பெற்றோருக்கோ அல்லது பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கோ அறிவித்தல் வேண்டும் ;

(ஈ) பிள்ளைகளுடன் கருணையாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும் ;

(உ) ஆபாச திரைப்படங்கள், பாடல்கள் அல்லது ஒலித்தொகுப்புக்கள் ஆகியவற்றை கையடக்கத் தொலைபேசி மூலம் பிள்ளைகளுக்கு காட்டுதல், கேட்பதற்கு இடங்கொடுத்தல், பிள்ளைகள் காணும் வித்ததில் வைத்தல் என்பன செய்தல் கூடாது ;

(ஊ) நடத்தை மற்றும் குற்றமிழைத்தல் தொடர்பாக உறுதி செய்வதற்கு உரிய பொலிஸ் நிலையத்திலிருந்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

(எ) வீட்டிலிருந்து பாடசாலைக்கும் பாடசாலையிலிருந்து வீட்டிற்கும் பிள்ளைகள் குறித்து பொறுப்பேற்றல் வேண்டும் ;

(ஏ) வாகனத்தினுள் மழைக்கு அணியும் மேற்சட்டை, குடை என்பன எடுத்துச் செல்லல் ;

20. பெற்றோரின் பொறுப்புக்கள் :

(அ) பிள்ளையை அனுப்புவதற்கு வாகனம் தகுந்த நிலைமையில் இருக்கிறதா எனப் பரிசீலித்தல் வாகனம் ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றில் பதிவு செய்த வாகனமொன்றா எனப் பரிசீலித்தல் ;

(ஆ) வாகன உரிமையாளர் மற்றும் வாகனச் சாரதியின் அனைத்து தகவல்களையும் தம்வசம் வைத்திருத்தல் ;

(இ) உரிய வாகனம் நியமங்களுக்கு ஏற்றதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அல்லது சாரதியின் நடத்தைகள் குறித்து சந்தேகங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்திற்கு முறையீடு செய்தல் ;

(ஈ) பெற்றுக்கொள்ளும் சேவைக்குரிய கட்டணத்தை இணங்கியபடி வாகன உரிமையாளருக்கு செலுத்துதல் ;

(உ) கட்டணத்தைத் தீர்மானிக்கும் போது வாகன உரிமையாளரும் பிள்ளையின் பெற்றோரும் இணக்கத்திற்கு வரவேண்டும்;

(ஊ) பிள்ளைக்கு தொற்றுநோய் ஏற்பட்டிருப்பின் நோய் குணமாகும் வரை வாகனத்தில் அனுப்பாதிருத்தல் ;

(எ) நோயுற்றிருக்கும் பிள்ளையை வாகனத்தில் அனுப்புகையில் சாரதிக்கோ அல்லது வாகன உரிமையாளருக்கோ அறிவித்தல் ;

(ஏ) தமது பிள்ளையை பாடசாலைக்கு ஏற்றிச் செல்லும் வாகனத்தில் தகவல்களை அதிபரூடாக வகுப்பாசிரியருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் ;

(ஐ) தமது பிள்ளை பாடசாலைக்குப் போகாத சந்தர்ப்பங்களில் பாடசாலை விடும் உரிய நேரத்திற்கு முன்போ அல்லது தாமதித்தோ பிள்ளையை கூட்டிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அது குறித்து சாரதிக்கு முன்னதாகவே அறிவித்தல் ;

(ஓ) தேவையற்ற தாமதம் ஏற்படாதிருக்க உரிய நேரத்தில் பிள்ளையை வாகனத்திற்கு அனுப்புதல்.

21. பாடசாலையின் பொறுப்புக்கள் :

(அ) பிள்ளைகள் பாடசாலைக்கு வரும் வாகனங்களின் விவரங்களைப் பாடசாலை கொண்டிருப்பதுடன் பிள்ளைகள் பாதுகாப்பாக உரிய போக்குவரத்துச் சேவைகளுக்கு ஒப்படைப்பதில் திருப்தியுறும் அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) பாடசாலை வாயிலில் பிள்ளைகளின் வருகை மற்றும் வெளியேறலைப் பரிசீலித்தல் ;

(இ) பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு பின்னர் வாகனங்களில் வரும் பிள்ளைகள் தொடர்பாகத் தேடிப்பார்த்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஈ) அப்பிள்ளைகளின் சந்தேகத்திற்கிடமான நிலைமையை காணுமிடத்து பெற்றோரை அழைப்பித்து அது தொடர்பாக அறிவித்தல் ;

(உ) சந்தேகத்திற்கடமான சந்தர்ப்பங்களில் உரிய ஒழுங்குபடுத்தல் நிறுவனத்திற்கு முறையீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

22. ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் பொறுப்புக்கள் :

(அ) உரிய அடிப்படைத் தேவைகளைப் பிரிசீலித்து தகுதிகளைப் பூர்த்தி செய்திருப்பின், பாடசாலைப் போக்குவரத்துச் சேவையாக பதிவைப் பெற்றுக்கொடுத்தல் ;

(ஆ) சாரதிகளைப் பதிவு செய்து கொள்ளல் ;

(இ) சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கான தகுதிச் சான்றிதழை வழங்கலை அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள எந்த நிறுவனத்தின் மூலமும் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையை ஏற்படுத்துதல் ;

(உ) பாடசாலைப் போக்குவரத்துச் சேவையை எளிதாக இனங்காணும் வழிமுறையாக ஸ்டிக்கர் தயாரித்து அதனை பொது மக்களுக்கு அறிமுகஞ் செய்தல் ;

(ஊ) அனுமதிப்பத்திரத்தை உடையவர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் ;

(எ) வாகன உதவியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல். உரிய மாகாண நிர்வாக நிறுவனங்களுடன் இணைந்து வாகனங்களை நிறுத்துவதற்கான இடத்தை தேவையான வசதிகளுடன் ஏற்பாடு செய்தல் ;

(ஏ) கிடைக்கும் முறையீடுகளை விசாரித்து நியாயத்தை நிறைவேற்றுதல் ;

(ஐ) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பாடசாலைப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனத்தை பரிசீலித்தலின் போது வாகன நிறுத்தமிடங்களில் மாத்திரம் பரிசீலிப்பதற்கான வழிமுறையை ஏற்படுத்தல் ;

(ஒ) பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்கையில் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு ஒழுங்குப்படுத்தல் நிறுவனம் எப்போதும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருத்தல் ;

(ஓ) பாடசாலை பஸ் வண்டி உரிமையாளர் சங்கங்களுடன் கலந்துரையாடி பரஸ்பர இணக்கத்தின் பின்னர், முறையான கட்டண திருத்த வழிமுறைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்திற்கு உரியதாகும் ;

* ஏதேனும் முறையான கட்டண செலுத்துதல் வழிமுறைக்கு இணங்கவேண்டியுள்ளதுடன், கட்டண திருத்தங்களைச் செய்வதில் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் தலையிடுதல் வேண்டும் ;

(ஔ) சாரதிகளுக்கான அடையாள அட்டை ஒன்றை அறிமுகப்படுத்தல் ;

(க) பாடசாலைப் பிள்ளைகள் போக்குவரத்து மேற்கொள்ளும் வாகனங்களுக்கு காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தலும் அதற்கான நடிவக்கைகளை மேற்கொள்வதற்கான விடங்களை ஒழுங்குபடுத்தலும் ;

(ங) பாடசாலைப் பிள்ளைகள் போக்குவரத்து மேற்கொள்ளும் வாகன உரிமையாளர்கள் மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் ஒன்றிற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

இந்த ஒழுங்குகளை மீறும், புறக்கணிக்கும் அல்லது கவனத்திற் கொள்ளாதிருக்கும் எவரேனும் ஒருவர் ஒப்பந்தத்தை முறித்தவராகக் கருதப்படுவார்.

ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அல்லது பரிசோதகர் குழுவினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் போது இணங்கிய நிபந்தனைகளை மீறியோ அல்லது முறித்தோ இருக்கும் சந்தர்ப்பங்களில் அது குறித்து சங்கங்களுடன் கலந்துரையாடி பொருத்தமான முறையில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல் நிறுவனத்திற்கு உரியதாகும்.

எவ்வாறெனினும், குறிப்பிட்ட ஒழுங்குப்படுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தீர்மானம் தொடர்பாக பாடசாலை பஸ் வண்டி உரிமையாளர் சங்கங்களுடன் கலந்துரையாடுவதற்கு அதிகார சபையினால் முடியும்.

இந்த ஒழுங்குவிதிகளில் சிங்கள, தமிழ் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்களக் கூற்றை யே செயற்படுத்துதல் வேண்டும்.

சொல் விளக்கம் :

(i) அதிகார சபை என்பதால் கருதப்படுவது மேற்படி சட்டவாகத்தின் கீழ் மேல் மாகாண வழிப்பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை ஆகும் ;

(ii) சங்கங்கள் என்பதால் மேல் மாகாணத்திற்குள் நிறுவனங்கள் பதிவு செய்யும் அலுவலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து அதிகார சபையினால் இனங்காணப்பட்ட சங்கங்கள் எனக் கருதப்படுகின்றன.

(iii) பாடசாலை சேவைப் போக்குவரத்து என்பதால் சிறார்கள் பிள்ளைகள் உட்பட்ட அனைத்து பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லல் கருதப்படும்.

## முதலாவது அட்டவணை

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 50.00 |
| 2. | நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திர கட்டணம் | 500.00 |
| 3. | பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமொன்றை மாற்றுவதற்கான கட்டணம் | 500.00 |
| 4. | விபரச்சீட்டுக்கு (லேபல்) | 30.00 |

## இரண்டாவது அட்டவணை

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | செல்லுபடியாகும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை தம் வசம் வைத்திராமை | 100.00 |
| 2. | அனுமதிப்பத்திர விவரச்சீட்டு குறிப்பிட்டபடி காட்சிப்படுத்தப்படாமை | 100.00 |
| 3. | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் வழங்கப்படும் அறிவுறுத்தல் மற்றும் சமிக்ஞைகளைப் பின்பற்றாமை | 100.00 |
| 4. | அனுமதிப்பத்திர விபரச்சீட்டை முகப்புக் கண்ணாடியில் காட்சிப்படுத்தாமை | 100.00 |
| 5. | அதிகாரசபையால் வழங்கப்பட்ட சாரதி அடையாள அட்டையை சாரதி தம் வசம் வைத்திராமை | 100.00 |
| 6. | அதிகாரசபையால் பயணிகள் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் வாகனம் தொடர்பாகக் கோரப்படும் ஆவண விபர அறிக்கைகளை முன்வைக்காதிருத்தல் | 100.00 |
| 7. | அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத சாரதி ஒருவரால் மேற்கொள்ளப்படும் பயணிகள் போக்குவரத்து | 1,00.00 |

11- 475

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.